செ.கு.எண் :37 நாள் : 11.04.2022

- **முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் பத்திரிக்கையாளர்களுக்கு சிறப்பு முகாம்.**
- **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த ரோபாடிக் அறுவை சிகிச்சை கருவியில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்றவர் மிக விரைவில் குணப்படுத்தி மருத்துவர்கள் சாதனை.**

***

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பத்திரிக்கையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் பதிவு செய்யும் முகாமினை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் மற்றும் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் ஆகியோர் இன்று (11–04–2022) சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் தொடங்கி வைத்தனர். இந்நிகழ்ச்சிக்குப் பிறகு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் **செய்தியாளர்களிடம்** தெரிவித்ததாவது:

மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 23–7–2009 அன்று உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான முதலமைச்சர் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தினை முதலமைச்சராக இருந்து தொடங்கி வைத்தார்கள். இக்காப்பீட்டுத் திட்டத்தினை மீண்டும் புதியதொரு விரிவான காப்பீட்டுத் திட்டமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 10–01–2022 அன்று பொதுத்துறை காப்பீட்டு நிறுவனம் அதிக சிகிச்சை முறைகளுடன் மேலும் 5 ஆண்டுகளுக்கு செயல்படுத்தவும், அங்கீகரிக்கப்பட்ட செய்தியாளர்கள், பருவ இதழ் செய்தியாளர்களுக்கு மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தை விரிவுபடுத்தியும் தொடங்கி வைத்தார்கள்.

கூடுதலான மருத்துவ வசதிகளுடன் இத்திட்டத்தில் தற்போது 1700 மருத்துவமனைகள் சிகிச்சை வழங்கி வருகின்றன. இதில் 800 அரசு மருத்துவமனைகளும், 900 தனியார் மருத்துவமனைகளும் சிறப்பான சிகிச்சை வழங்கி வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1090 மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை முறைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

இக்காப்பீட்டுத்திட்டத்தில் வேறு மாநிலங்களிலிருந்து புலம்பெயர்ந்தோ, 6 மாதத்திற்கு மேல் தமிழ்நாட்டில் வசித்து வந்தோர், இலங்கை முகாமிற்கு வெளியே வசிக்கும் இலங்கைத் தமிழர்கள், ஓய்வூதியம் பெறும் முதியோர் மற்றும் ஆதரவற்றோர், மாற்றுத்திறனாளிகளின் குடும்பம், கோவிட்

தொற்றினால் பெற்றோரை இழந்த குடும்பம் ஆகியோர் இத்திட்டத்தில் இணைந்து பயன்பெற்று வருகின்றனர்.

கடந்த நிதிநிலை அறிக்கையில் 78வது அறிவிப்பாக அறிவித்தவாறு செய்தித்துறை, அங்கீகரிக்கப்பட்ட செய்தியாளர்கள் மற்றும் பருவ இதழ் செய்தியாளர்களின் குடும்பங்களுக்கு எவ்வித வருமான உச்சவரம்பின்றி, முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத்திட்டத்தின்கீழ் பயன்பெற 1,414 செய்தியாளர் குடும்பங்களை இணைக்கும் விதத்தில் இதுவரை 258 செய்தியாளர்கள் குடும்பங்கள் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் இன்று சிறப்பு முகாமாக துவக்கி வைக்கப்பட்டு, தொடர்ந்து இரண்டு வாரங்களுக்கு நடைபெறுகிறது. அனைத்து பத்திரிக்கை மற்றும் ஊடகவியலாளர் நண்பர்களின் குடும்பங்கள் இதில் இணைந்து பயன்பெற வேண்டுகிறோம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15–3–2022 அன்று அதிநவீன இயந்திர மனிதவியல் அறுவை சிகிச்சை அரங்கம் சுமார் ரூபாய் 35 கோடி மதிப்பிலான இந்த கருவியை சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் தொடங்கி வைத்தார்கள். எய்ம்ஸ் போன்ற தனியார் மருத்துவமனைகளில் இதுவரை பயன்பெற்று வந்த இந்த அதிநவீன இயந்திர மனிதவியல் அறுவை சிகிச்சை இப்போது அரசு மருத்துவமனைகளிலும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்த ரோபாட்டிக் கருவியினால் கடந்த 7–4–2022 அன்று திருப்பத்தூரைச் சேர்ந்த திரு.கிருஷ்ணன், வயது 44 சிறுநீர் பாதையில் புற்றுநோய் கண்டறியப்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, நலமுடன் இரண்டாம் நாளே வீடு திரும்பியுள்ளார். தமிழகத்தில் இதுவொரு மருத்துவ சாதனையாக கருதப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.மகேஷன் காசிராஜன் இ.ஆ.ப., தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் டாக்டர் உமா இ.ஆ.ப., மருத்துவ கல்வி இயக்குநர் மரு.நாராயணபாபு மற்றும் அரசு உயரலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in